**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ. எண். 159** **நாள் : 15.10.2018**

**பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் அம்மா உணவகங்களில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத்திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் திடீர் ஆய்வு.**

********

பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் எழும்பூர் பாந்தியன் சாலையில் உள்ள அம்மா உணவகத்தில் வழங்கப்படும் உணவின் தரம் மற்றும் செயல்பாடுகள் தொடர்பாக மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் இன்று (15.10.2018) திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் உன்னதத் திட்டமான அம்மா உணவகம் திட்டம், உலகில் மிகச் சிறந்த திட்டமாகவும், சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கு உந்து சக்தியாக விளங்குவதாகவும் சமூக பொருளாதார நிபுணர்களால் பாராட்டப்படுகின்றது. ஏழை எளிய மற்றும் நடுத்தர மக்கள் வயிறார உண்ணும் வகையில் மலிவு விலையில் சுகாதாரமான மற்றும் தரமான உணவுகளை வழங்குவதற்காக பெருநகர சென்னை மாநகராட்சியில், 407 அம்மா உணவகங்களும், பிற மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் 247 அம்மா உணவகங்களும் மற்றும் ஊரகப் பகுதிகளில் 4 அம்மா உணவகங்கள் என தமிழகம் முழுவதும், மொத்தம் 658 அம்மா உணவகங்கள் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் துவக்கி வைக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகின்றன.

அம்மா உணவகங்களில், ஒரு ரூபாய்க்கு ஒரு இட்லி, 3 ரூபாய்க்கு தயிர் சாதம், 5 ரூபாய்க்கு பொங்கல் மற்றும் பலவகை சாதங்களும், பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள அம்மா உணவகங்களில் மட்டும் இரவு நேரங்களில் 2 சப்பாத்திகள் 3 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகின்றன.

அம்மா உணவகங்கள் மூலம், பெருநகர சென்னை மாநகராட்சியில் மட்டும், நாள்தோறும் 2.50 முதல் 3 இலட்சம் மக்கள் பயன்பெற்று வருகிறார்கள். நாளொன்றுக்கு 8.50 இலட்சம் ரூபாய்க்கு உணவு விற்பனை ஆகின்றது. அம்மா உணவகங்கள் மூலம் சென்னை நீங்கலான பிற 11 மாநகராட்சிகளில் நாள்தோறும் 3.50 முதல் 4 லட்சம் ரூபாய் வரையிலும், 124 நகராட்சிகளில், 4.50 முதல் 5 லட்சம் ரூபாய் வரையில் விற்பனை ஆகின்றது.

30.09.2018 வரையில், தமிழ்நாடு முழுவதும் உள்ள 658 அம்மா உணவகங்களிலும், 99 கோடியே 58 இலட்சம் இட்லிகளும், 35 கோடியே 8 இலட்சம் பலவகை சாதங்களும், 25 கோடியே 7 இலட்சம் சப்பாத்திகளும் மலிவு விலையில் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் எழும்பூர் பாந்தியன் சாலையில் உள்ள அம்மா உணவகத்தில் தயாரிக்கப்படும் உணவுகளின் தரம், உணவகங்களின் பராமரிப்பு, சுகாதாரம் பேணுதல், உணவு பற்றிய மக்களின் கருத்து போன்றவை குறித்து இன்று நேரடியாக திடீர் ஆய்வு செய்தார்.

அம்மா உணவகங்களை ஆய்வு செய்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்களின் நோக்கம் நிறைவேறும் வகையில் அனைத்து அம்மா உணவகங்களில் வழங்கப்படும் உணவு தங்களது இல்லங்களில் தயாரிப்பது போன்று தரமானதாகவும், சுகாதாரமான முறையில் சுவையாகவும் பணியாளர்கள் தயாரிக்க வேண்டும் எனவும், உணவகங்களின் உணவருந்தவரும் வாடிக்கையாளர்களை மனமுவந்து உபசரிக்க வேண்டும் எனவும், அலுவலர்கள் பணியாளர்களுக்கு உள்ள குறைகளை அறிந்து அவ்வப்பொழுது நிவர்த்தி செய்ய வேண்டும் எனவும் உத்தரவிட்டார்.

‘‘அம்மா உணவகம்’’ திட்டத்தின் சிறப்புகளை கர்நாடகம், ஆந்திரம், உத்தரகாண்ட், ராஜஸ்தான், குஜராத், புதுடெல்லி ஆகிய மாநிலங்களிலிருந்து மட்டுமல்ல, எகிப்து நாட்டிலிருந்தும் கூட அதன் அமைச்சர்களும், அதிகாரிகளும் நேரில் வந்து பார்வையிட்டு, அம்மா உணவகத்தின் செயல்பாடுகளைப் பாராட்டியுள்ளதை நினைவுகூர்ந்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஆந்திரா, கர்நாடகா மற்றும் ராஜஸ்தான் மாநில அரசுகள், மாண்புமிகு அம்மா அவர்களின் உன்னதத் திட்டமான **“அம்மா உணவகம்”** திட்டத்தை, தங்கள் மாநிலங்களில் செயல்படுத்தியுள்ளன என பெருமிதத்தோடு தெரிவித்தார்.

மேலும், அம்மா உணவகங்களின் செயல்பாடுகள் மற்றும் உணவு பொருட்களின் தரம் ஆகியவற்றில் ஏதேனும் சிறு குறைகள் கண்டறியப்பட்டாலும், சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் மீது **மிகக்கடுமையான நடவடிக்கைகளை** எடுக்கும்படி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்த ஆய்வின் போது, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் (பொ) திருமதி ஆர்.லலிதா, இ.ஆ.ப., துணை ஆணையாளர் (சுகாதாரம்) திரு.பி.மதுசுதன் ரெட்டி, இ.ஆ.ப., மாநகர நல அலுவலர் மரு. என்.ஏ.செந்தில்நாதன், மண்டல அலுவலர்கள் மற்றும் மண்டல பொறியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**